**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

E.A.No. 2/2024 in E.P.No.17/2024

**ம.சா. 1– நாகராஜன் , த/பெ.துரைச்சாமி**

**நாள். 18.08.2026**

**ம.சா. 1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் தாயார் கிரையம் வாங்கிய கிரையத் தொகை ரூ.44 ஆயிரம் ஆகும். சைனா பல்டாக்டர் புரோநோட்டுக்காக கடன் பற்று வகையில் ரூ.30 ஆயிரமும், ரொக்கம் பெற்றுக் கொண்ட வகையில் ரூ.10 ஆயிரமும் என் பற்று தொகையில் ரூ.40 ஆயிரம் என என் தாயார் கிரைய ஆவணத்தில் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான் , நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சுமார் ரூ.44 ஆயிரம் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. மைனர் சொத்தை கிரையம் வாங்குவதற்காகத்தான் வைப்பீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். எனக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியாது. நிரூபண வாக்குமூலத்தில் ஆங்கில வாசகங்கள் எழுதப்படவில்லை என்றால் சரிதான். அவ்வாறு ஆங்கிலத்தில் வாசகங்கள் இருந்தால் அது என்னை கட்டுப்படுத்தாது என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற கிளையில் AS.173/2016, லோக் அதாலத்தில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு செல்லாது என பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். EP.8/2014 மனுவை தள்ளுபடி செய்ய கோருகிறேன் என்றால் சரிதான். மனுச் சொத்துக்கு நான் உரிமையாளர் என விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். நான் அனுபவிக்கும் சொத்திற்கு எதிர்மனுதாரர்கள் தொந்தரவு செய்யக் கூடாது என உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் பத்திர மதிப்புக்கு நீதிமன்ற கட்டணம் கட்டியுள்ளேன் என்றால் சரிதான், எவ்வளவு என்று ஞாபகம் இல்லை. நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு நீதிமன்ற கட்டணம் கட்டியுள்ளேன் என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த மனுவில் எத்தனை சர்வே எண்களில் பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் 760/1,760/3,760/4,760/6,760/7,761/1 761/2, ஆகியவற்றிக்கு கோரியுள்ளேன். அதன் மொத்த விஸ்தீரணம் 6 ஏக்கர் 30 செண்ட் ஆகும். நான் தாக்கல் செய்துள்ள மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான், அதில் சொத்து விவரம் சொல்லியுள்ளேனா என்றால் நிறைவேற்று மனுவில் தாக்கல் செய்துள்ள புலஎண்கள் சம்மந்தமாக மட்டும இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன்.

அதில் எல்லா சொத்து விவரங்களையும் காட்டவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னமாதிரி எந்த சொத்து விவரமும் காட்டவில்லை என்றாலும் அதற்கான நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள AS.173/2016 வழக்கு விவரத்தினை இந்த மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், ஏனெனில் மேற்படி வழக்கில் நான் வாதியோ, பிரதிவாதியோ இல்லை. 1988 ல் என் தாயார் கிரையம் வாங்கியதற்கு பின்பு 1990 ல் ஒரு வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பாகியுள்ளது என்றால் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.2372/1990 என்றால் சரிதான். என் தாயார் மேற்படியாரின் கிரைய ஆவணத்தின் அடிப்படையில் மேற்படி வழக்கு சொத்து தனக்கு பாத்தியப்பட்டது என்றும் மேற்படியார் தாவா சொத்தில் அனுபவிப்பதை பிரதிவாதிகள் தடை இடைஞ்சல் செய்யக்கூடாது என உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியதில் அது எனக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். அந்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை என்னிடம் காட்டப்படுவதுதான். அது **எ.ம.சா.ஆ.2 மற்றும் எ.ம.சா.ஆ.3..** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த வழக்கில் என் தாயார்ஆஜராகததால் தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரியல்ல. அந்த வழக்கில் 27 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க கோரி மனு தாக்கல் செய்ததில் ரூ.750 அபராதம் கட்டச் சொல்லி உத்தரவாகியுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. அந்த தொகையை கட்டாத காரணத்தால் மீண்டும் IA.574.575 மனுவும் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் தெரியாது.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா ஒத்தி வைக்கப்படுகிறது.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.08.18 20:05:28 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.